5.11.2025 Mcop 225/2023 ம.சா1 லெட்சுமி சங்கர்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சமயம் என் அப்பா மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். காரும் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த பிறகு சம்பவயிடத்தை சென்று பார்த்தேன். சம்பவயிடத்தில் இருந்து 200 மீட்டர் தள்ளி சாலையை கடக்கும் பகுதி உள்ளது என்றால் சரிதான். சமப்வயிடமானது சாலையை கடக்கும் பகுதி இல்லை என்றால் சரிதான். கார் மெதுவாக வந்தது என்றும், எனது தகப்பனார் கவனக்குறைவாக சாலையை கடந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணம் என் தகப்பனார் என்றும், 1ம்எதிர்மனுதாரர் காரணம் அல்ல என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக நான் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். மனுவில் எனது அப்பா விவசாய கூலி தொழில் செய்ததாக சொல்லியுள்ளேன். எனது தகப்பனார் கொத்தனார் வேலை செய்யவில்லை என்றால் செய்து வந்தார். எனது அப்பாவின் வயது, வருமானம் பற்றி எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். ம.சா.ஆ 3 ஆவணமானது காரின் ஒட்டுனரின் ஒட்டுனர் உரிமம் என்றால் சரிதான். ம.சா.ஆ 4 என்பது காரின் காப்பீடு சான்று என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரர் அவரது வாகனத்தை 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் 3ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு

தொகை அதிகமானது என்றால் சரியல்ல.

(1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணையை 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது)

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.